# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>அசோக மன்னரின் வைஷாலி தம்ம தூணின் பிரதிமை</u>**
**<u>இலங்கையில் இந்திய உயர் ஸ்தானிகரால் திறந்துவைப்பு</u>**

2025 ஜூலை 21 ஆம் திகதி வஷ்கொடுவவில் உள்ள ராஜகுரு ஸ்ரீ சுபுதி மகா விகாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைஷாலியில் உள்ள அசோக மன்னரது தம்ம தூணின் பிரதிமை ஒன்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

2. இதேவேளை புனித சின்னமான கபிலவஸ்துவின் விசேட தரிசனம் ஒன்றும் குறித்த விகாரையின் தலைமை குருவான அதி வணக்கத்துக்குரிய கலாநிதி வஸ்கொடுவாவே மகிந்தவன்ச மகாநாயக்க தேரர் அவர்களுடன் இணைந்து உயர் ஸ்தானிகரால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சங்கைக்குரிய மகாநாயக்க தேரர் அவர்களது பிறந்த தினத்திற்காகவும் உயர் ஸ்தானிகர் அவர்கள் தனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்து அவரது நீண்ட ஆயுளுக்காகவும் பிரார்த்தித்திருந்தார்.

3. இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய சங்கைக்குரிய மகாநாயக்க தேரர் அவர்கள், இலங்கையில் முதல் தடவையாக அசோக மன்னரது வைஷாலி தம்ம தூணின் பிரதிமை திறந்து வைக்கப்படுவதாக சுட்டிக்காட்டினார். அத்துடன் பௌத்த போதனைகளை பாதுகாப்பதில் அசோக மன்னரின் முக்கிய வகிபாகம் தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்த அவர், இந்த விகாரைக்கு இப்புனித சின்னங்கள் கொண்டுவரப்பட்டிருந்த வரலாற்று சிறப்புமிக்க தருணங்கள் தொடர்பாகவும் விவரித்திருந்தார். அது மட்டுமல்லாமல் பௌத்த பாரம்பரியங்களின் மேம்பாடு மற்றும் அவற்றை பாதுகாப்பதற்காக பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் கீழ் இந்திய அரசாங்கம் மேற்கொண்டுவரும் சகல முயற்சிகளுக்காகவும் அதிவணக்கத்துக்குரிய மகாநாயக்க தேரர் அவர்கள் பாராட்டுகளை தெரிவித்திருந்தார்.

4. இங்கு உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் ஆழமான, வரலாற்று, கலாசார மற்றும் ஆன்மீகப் பிணைப்பினை இந்த தருணம் குறித்து நிற்பதாக தெரிவித்தார். அத்துடன் இன்று இலங்கையானது பௌத்த போதனைகள் மற்றும் கற்கைகளுக்கான சிறந்த மையமாக திகழ்வதாக குறிப்பிட்ட அவர், இரு நாட்டு மக்களையும் இணைக்கும் வலுவான பிணைப்புகளில் பகிரப்பட்ட பௌத்த மரபு முக்கியமானது என்றும் தெரிவித்திருந்தார்.

5. இந்த பாரம்பரியத்தினை மேலும் வலுவாக்குவதற்காக இலங்கையில் இந்தியாவால் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்கள், குறிப்பாக பௌத்த விகாரைகள் மற்றும் பிரிவேனாக்களில் மின்சார கட்டமைப்புகளை உறுதிப்படுத்துவதற்காக கிட்டத்தட்ட 10,000 விகாரைகள் மற்றும் பிரிவேனாக்களுக்கு இலவச சூரியக்கல மின் சக்தி கட்டமைப்புகளை பொருத்தும்

நடைமுறையில் உள்ள திட்டம், அநுராதபுரம் புனித நகர் திட்டத்துக்கான உதவி, குஜராத்தின் தேவிநேரிலிருந்து புத்த பெருமானின் புனித சின்னங்களை வரவழைத்து இலங்கையில் தரிசனத்துக்காக வைத்தல், சரணாத் மற்றும் கபிலவஸ்துவில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித சின்னங்களின் தரிசன நிகழ்வுகள், பல்வேறு எண்ணிக்கையிலான யாத்திரைகள், இலங்கை யாத்திரிகர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட விசேட விஜயங்கள், புத்தபெருமானின் வாழ்க்கையை சித்தரிக்கும் நடமாடும் கண்காட்சிகளின் தொகுப்பு, நாமமால மற்றும் பாலவதாரோ என்ற பாளி மொழியிலான இலக்கண புத்தகங்களின் மீள்பதிப்பு, ஜாதகக் கதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பு மற்றும் அவற்றினை அறநெறி பாடசாலைகளில் உபயோகித்தல் போன்றவை, ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

****

**கொழும்பு**
**22 ஜூலை 2025**